# நந்தி

மாலை 3 | 1966 ஜனவரி
விசுவாவசு, மார்கழி | மணி 3


## புத்தாண்டு வாழ்த்து

நாட்டிற்கு பல துறைகளிலும் துன்பத்தைக் கொடுத்த 1965 ஆண்டு கழிந்து 1966 பிறந்தது. புதிய ஆண்டு நாட்டு மக்களுக்கு நன்மை யளிக்கட்டும். உணவுப் பஞ்சம் தீரட்டும். மக்கள் அனைவரும் இனிது வாழட்டும். பாரதம் முழுதும் ஒற்றுமை நிலவட்டும். சுத்த சமரச சன் மார்க்கம் தழைத்தோங்கட்டும்.

## இந்த மணியில்—

"நந்தி"யின் இந்த மணியில் ஒரு சிறப்பு அம்சத்தைக் காண்பீர்கள். மைசூர் மாநிலம், கோலார் தங்க வயல், உரிகத்திலுள்ள, முதல் நிலைக் கல்லூரி, தமிழ்ப் பேராசிரியர் உயர் திரு. வ. பெருமாள் அவர்கள், "குறட் பாவின் திறப்பாடு" என்ற தலைப்பின் கீழ் எழுதிய ஒரு கட்டுரையை மிக மகிழ்ச்சியுடன் இந்த மணியில் பிரசுரிக்கிறோம். அக் கட்டுரையில், ஆசிரியர் வெளியிட்டுள்ள சீரிய கருத்துக்கள், சிந்தனைக்குரியவை. இவ் வாசிரியருடைய கட்டுரைகள் மேலும் "நந்தி"யில் தொடர்ந்து வெளிவரும்.

## மதுக் கடைகள்

"ஆயுர்வேத மருந்துக் கடை" என்ற விளம்பரப் பலகை வெளியே தொங்குவதையும், ஆசவ, அரிஷ்டங்கள் என்ற பெயரில், போதை தரும் பானங்கள், கிராமங்களிலும், நகரங்களிலும் பல இடங் களில் விற்பனை செய்யப்பட்டு வருவதைக் குறித்தும் முன் இதழ் ஒன்றின் தலையங்கத்தில் எழுதியிருந்தோம். தமிழக அரசாங்கம் இது விஷயத்தில் உடனடியாக தக்க நடவடிக்கை யெடுப்பார்களென்று எதிர்பார்த்தோம். நடக்கவில்லை. நாளுக்கு நாள் கடைகள் பெருகிக் கொண்டே வருகின்றன. மயக்கம் தரக்கூடிய விஷப் பொருள்கள் கலந்த "ஆசவ, அரிஷ்டங்கள்" என்ற பெயரில் விற்கப்படும் மதுபானங்களை உற்பத்தி செய்கிறவர்கள், விற்பனையாளர்கள் இவர்கள்மீது கண்டிப்பான நடவடிக்கை யெடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## உணவு கலப்படம்

"எங்கும், எதிலும் கலப்படம்" என்பது ஒரு சினிமாப் பாட்டு முக்கியமாக, உணவில் கலப்படம் அதிகமாகி விட்டது. கலியாண விட்டில் விருந்துண்டவர்கள் வாந்தியெடுத்து, மயங்கி விழுந்து செத்துப் போவதைப் பற்றிய செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் வருகின்றன. பள்ளிகளில் மதியம் உணவு சாப்பிட்ட மாணவ, மாணவிகள் இக்கதிக்கு ஆளானுர்கள் என்றும் கேள்விப்படுகிறேம். "சென்னை நகரில், ஒரு மாதத்தில் மட்டும் சுமார் 160 பேர், உணவில் கலப்படம் செய்த குற்றத்திற்காக தண்டனை பெற்றுர்கள்" என்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது. இவர்களுக்கு அதிகப்படியாக விதிக்கப்பட்ட தண்டனை ரூபாய் இருபது. உணவில் கலப்படம் செய்து மக்களைக் கொல்லும் கயவர்களுக்கு ரூபாய் இருபது அபராதம் என்பது நகைப்பிற்கிடமானது. உணவைப் பதுக்கி, நாட்டில் பஞ்சத்தை உண்டாக்கும் கொடியவர்களை விட உணவில் கலப்படம் செய்கிறவர்கள் மோசமானவர்கள். இவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கவேண்டும். சட்டத்தில் இதற்குப் போதிய வசதி யில்லாவிடில், சட்டத்தை உடனே திருத்த வேண்டும்.

உணவு விடுதிகள் சுகாதார முறையில் இயங்குகின்றனவா என்பதையும், உணவு சமைக்கும் பாத்திரங்கள், சரியாக யிருக்கின்றனவா என்பதையும் கண்காணிக்கும் சுகாதார அதிகாரிகள் தங்கள் கடமையை தற்போது சரிவரச் செய்யவில்லை யென்றே நாம் கருதுகிறேம்.

---

## நன்கொடை

*"நந்தி"யின் சென்ற மாத மணி வெளியான பின் கீழ் குறிப்பிட்டுள்ள அன்பர்கள் "நந்தி"யின் வளர்ச்சிக்கு நன்கொடையளித்துள்ளார்கள். அவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றி. அன்பர்கள் மேலும் நன்கொடையளித்து ஆதரவளிக்கும்படி வேண்டிக்கொள்கிறேம்.*

| | |
|---|---|
| *சித்த வைத்தியர் பெஞ்சாமின்* | ரூ. *2 00* |
| *சித்த வைத்தியர் அ. மாணிக்க வாசகம், பி. ஏ. சென்னை 28.* | ரூ. *5 00* |
| *சித்த வைத்தியர் கே. இராமச்சந்திர இராஜா கிராப்பட்டி, திருச்சி.* | ரூ. *2 00* |
| *சித்த வைத்தியர் ஹாலாஸ்யநாதன், பொறையார்.* | ரூ. *5 00* |
| *சித்த வைத்தியர் ஆர். வி. நஞ்சப்ப செட்டியார், இராசீபுரம், சேலம்.* | ரூ. *50 00* |
| *சித்த வைத்தியர் ஆர். கலியாணசுந்தரம், துறையூர், திருச்சி.* | ரூ. *10 00* |
| *சித்த வைத்தியர் எஸ். அம்பி, ஹோசூர்.* | ரூ. *5 00* |

# சுவாச காசம்

(சித்தவைத்தியர் எம். கே. வீரராகவன்)

சிலேத்தும ரோகங்களில் அதிமுக்கியமானது காசரோகமும் சுவாச ரோகமுமாகும். இவற்றை ஆராயுமுன் காசம் சுவாசம் என்பதென்னவென தெரிந்து கொள்வோம்.

தமிழில் இருமல் என்பதற்கு வடமொழியில் **காசம்** எனவும், தமிழில் மூச்சுத்திணறல் அல்லது மூச்சுவாங்குவது என்பதை **சுவாசம்** எனப்படும். இச்சுவாசம், தடைப்பட்டு அத்துடன் இருமலும் சேரும்போது **சுவாச காசரோகம்** எனப்படும். இந்நோயை ஆங்கில மொழியில் **ஆஸ்தமா** எனப்படும். இனி காசத்தையும் சுவாசத்தையும் தனித்தனி பிரித்துப் பார்ப்போம்.

காசம் என்ற இருமல் நோய் ஐவகைப்படும். அதாவது வாத காசம், பித்தகாசம், கபகாசம், சீதகாசம், சயகாசம் எனவும் இதுவும் தவிர எலிகடிகாசம் என ஒன்றும் உண்டு. இத்துடன் அறுவகைப்படும்.

இதன் ஆரம்ப குறிகள்—தொண்டையில் தினவு, முட்களைப் போன்ற முளைகள் இருப்பதான உணர்ச்சி, அரோசிகம் இவை யுண்டாம்.

**செயல்:**- வாய்வானது தன்னிலையில் மாறுதலடைந்து மூலத்திலிருந்து மேலே கிளம்பி அக்கினியை மீறச்செய்து, மார்பினுள் நுழைந்து நுரையீரல், மூச்சுக்குழாய், தொண்டை முதலியவற்றைத் தாக்கி கபாலத்தைப்பற்றி இரத்ததாதுவைக் கெடுத்து, கண்களைப் பெயர்த்தெரிவது போலவும், இடுப்பிற்குச் சற்று கீழும், இரு விலாப்புரங்களிலும், மார்பிலும், அழுத்திப் பிடிப்பது போன்ற கஷ்டங்களையுண்டுபண்ணி, வெண்கல ஓசைபோன்ற தொனியுடன் வாயிலிருந்து வாயுவின் வேகம் இருமலாக கிளம்பும். இத்துடன் சளியும் வெளிப்படும். இவ்வியாதியை ஆங்கில சித்தாந்தப்படி பிராங்கயடீஸ் என்றும் இதுவே சற்று முதிர்ந்த நிலையிலுள்ளதற்கு அக்யூட் பிராங்கயடீஸ், கிராணிக் பிராங்யேடீஸ் எனப்படுவதாகத் தெரிகிறது.

**இவற்றில்:**—எலிகடி, வாத, பித்த, கபகாசம் இவை சாத்தியம். மற்றவை கஷ்டசாத்தியமும் அசாத்தியமாகும்.

மேற் சொன்ன காசம் என்ற இருமல்நோய் அதிகப்படுவதினாலும், இத்துடன் வாத, பித்த, கபம் தனித்தோ இரட்டித்து சேர்ந்தோ அதிகப்படுவதினாலும். இரைப்பையின் கோளாறு, புழுதி, புகை, அதிபோகம், மிகக்குளிர்ச்சியும், ஈரமுள்ள இடத்தில் வசித்தல், அதிகுளிர்ந்த நீரை உட்கொள்ளல் இவற்றால் **சுவாசம்** என்ற மேல் மூச்சு, திணறல் ஏற்படுவதாக நூலாதாரம். இதுவும் காசம்போல் ஐவகைப்படும்.

வாயுவின் போக்குவரத்துக்கான வழி கபத்தினுல் தடைப்படுவதினுல், இப்படி தடுக்கப்பட்ட வாயு உடலின் மற்ற பாகங்களில் பரவி, பிராணவாயுவானது உட்செல்லவும், வெளியே போகவும் முடியாமல், தடங்கல் ஏற்படுவதின் காரணமாக, சுவாச வாய்வு மார்பறையில் தங்கிக் கஷ்டமான நிலையில் குர்-குர் என்ற சப்தத்துடனும், பூனை கத்துவதுபோன்ற இசிவுடனும் திமிர் கொண்ட மாடுவிடும் திமிரான பெரும் மூச்சு போன்றும் சுவாசம் வெளிப்படும்.

**இதன் ஆரம்ப குறிகள்** :—மார்பில் வேதனை, கஷ்டமான பேச்சு, மயக்கம், தயக்கம், இருவிலாவலி) வயிர் பொருமல் இவையுண்டாம். இவை தனித்தனி குணங்கள்.

நம் தமிழ் வைத்தியப்படி இவ்விரண்டும் சேர்ந்து வழங்கப்பட்டுவருகிறது. இதன்படி இதை பன்னிரெண்டு வகைகளாக பிரிக்கலாம்.

**அவையாவன** :—மந்தார காசம், பட்சவந்தார காசம், சுடர் காசம், பித்த காசம், சுவாச காசம், இரத்த காசம், பீனிச காசம், வாத காசம், சிலேத்தும காசம், தொந்த காசம், வாத பித்த காசம், பித்த சிலேத்தும காசம் எனப் பன்னிரு வகைப்படும்.

**இவற்றில்** :—மந்தார, பட்ச மந்தார, சுடர், பித்த, சுவாச, இரத்த, பீனிச காசம் இவ்வேழும் சாத்தியமாம்.

இதில் சுவாசசாயம் அதைச்சார்ந்த சிறிய கிளைகள் சுருக்கமடைவதல், மார்பில் பாரமுண்டாகி சுவாசம் விடுவது மிகக் கஷ்டமாகி நெஞ்சில் உர் உர் என்ற இசிவு சத்தம் ஏற்பட்டு, மெலிந்த நாடியையும், கண்கள் ஒரே நிலையில் நின்று, ஆயாச மிகுதியால் வியர்வைவிட்டு, முகம்வாடி உடல் சில்லிட்டு மரண அவஸ்தையைப்போல் காணப்படினும், சிறிது நேரத்தில் இருமி இருமி கோழை வெளிப்பட்டு சுகநிலைக்கு வந்துவிடும். இதையே ஆஸ்த்மா வென்பர் நவீன மருத்துவர்.

**இதற்கு** :—தாளகபற்பம், தாளக செந்தூரம், கௌரி சிந்தாமணி, திப்பிலிரஸாயனம், தாளிசாதி சூரணம், தாளிசாதி வடகம், தாளகக் கருப்பு, கனகபூஷணம் முதலான மருந்துகளும்.

சிறிய, பெரிய நிற்க்குண்டி தைலம், முதலிய நொச்சி, ஆடாதோடை, கண்டங்கத்திரி. தூதுவளை முதலியவற்றின் கூட்டுத் தைல, சூரண, லேகியங்களாலும், சமயோசிதம்போல் நோயை வசப்படுத்தலாம்.

பசித்தூண்டியும், கபத்தை அறுக்கும் மருந்துப் முக்கியம்.

# அங்காதிபாத சுகரணவாத உற்பாலன நூல்

(டாக்டர் பு. மு. வேணுகோபால், எச். பி. ஐ. எம்.)

(முன் தொடர்ச்சி)

"ஆறே யருவி அகங் குளம் ஒன்றுண்டு
நாறே சிவகதி நுண்ணிது வண்ணமும்
கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும்
வேறே இருக்கும் விழுப்பொருள் தானே."

உடலின் அகத்தே அமுதப் பெருக்காகிய சிற்றாறுகள் உண்டு. அவ்வாறு அருளால் போய் நிறையும் நெஞ்சக் குளமும் ஒன்றுண்டு. அங்கு திகழ்வது அளவிடப்படாத பதிநிலையாகும். அதன் இயல்பும் நனிம்கு நுண்மையாகும். அங்கு ஆற்றல் ஒரு கூராகக் கொண்டு சிறப்பாக வீற்றிருக்கும்.

"திசையெட்டுந் தேரெட்டுந் தேவதை யெட்டும்
வகை யெட்டு மாய்நின்ற ஆதி பிரானை
வகை யெட்டு நான்குமற் றுங்கே நிறைந்து
முகை யெட்டும் உள்நின் றுதிக்கின்ற வாறே."

இந்த சுழுமுனை சக்தியானது எட்டுத் திசைகள் வாயிலாக ஆண்டு, அருள் ஆணையால் காவல் புரிகின்றது. இதற்கு வாகனம் எட்டு, அவை பூதங்கள் ஐந்து, ஞாயிறு, திங்கள், உயிர் ஆக எண்மர். அன்றியும் அறிதற் பொறி ஐந்து, செய்தற் பொறி ஐந்து, மனம் ஒன்று, புத்தியாகிய இருப்பு ஐந்து, ஆக பன்னிரண்டும் புடை பெயராது அசைவற்று நின்றவிடத்து அங்கே சிவம் நிறைந்து தோன்றும். ஆகையினுல் இருதயத்தில் உயிர் அல்லது பிராணன் தன் நான்கு அந்தக்கரணங்களோடு விட்டுவிட்டு அலர்ந்துகொண்டு செயல் புரிகிறது.

"ஏழும் சகளம் இயம்புங் கடங்தெட்டில்
வாழும் பரமென் றதுகடந் தொன்பதில்
ஊழி பராபரம் ஓங்கிய பத்தினில்
தாழ்வது வான தனித்தன்மை தானே."

எட்டிதழ் தாமரையுள் கிழக்கு முதல் வடக்கு ஈருக உள்ளன. ஏழு இதழ்கள் ஆருயிர் வகை ஏழின் நிலைக்களனுகும். அதாவது கிழக்கு முதல் வடக்கான ஏழு இடமும் சிவத்தின் சகளம். எட்டாவது வட கிழக்கு பரத்திற்கு இடம். ஒன்பதாவது இதழ் சதாசிவத்திற்கு இடம். பத்தாவது இதழ் ஆருயிரும் பேருயிரும் வேற்றறப் புணர்ந்து நிற்கும் நிலைக்களனுகும்.

(தொடரும்)

# சித்த வைத்திய மருந்துகள்

**ஜீசான் :** *வீரிய விருத்திக்கு.*

**பிரிங்கால் :** *மனத்திற்கு நிம்மதி அளிக்க.*

**ருமோசால் :** குக்குலு சேர்ந்தது, வாயு, சூலை, மேகத்தடிப்பு வெட்டை முதலியவற்றிற்கு.

**சர்பிடின் :** *ரத்தக்கொதிப்பு, மூளைக் கோளாறுகளுக்கு நல்லது.*

**பிரமிலான் :** *மதுமேகத்திற்கு உகந்தது.*

**அசோகாதிலடி :** *மாதவிடாயை வெளிப்படுத்த,*

*மற்றும் பல புதிய மருந்துகள்.*

பற்பம்

லேகியங்கள்

சர்க்கரை பூசப்பட்ட மாத்திரைகள்

விசேஷ மருந்துகள்

எங்கள் நவீன லாபரெட்டரியில் சென்ற **20** வருட காலமாக தயார் செய்து அளிக்கிரேம்.

தமிழ் நாட்டிலேயே ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட நவீன சாதனங்கள் பொருந்திய மருந்து தயாரிப்புசாலை நமது தான்.

திருவாரூர் மருந்துகள் விஞ்ஞான முறையில் தயார் செய்யப்பட்டவை. ஆகவே உயர்தரமானவை.

## நோயாளிகளுக்கு ஆலோசனை எப்பொழுதும் கூறப்படும்.

(விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்)

## டாக்டர் நிவாஸ் கெமிக்கல்ஸ்,

பார்மசூடிகல் மானுபாக்சரர்ஸ், நியூட்ரிமெண்ட்ஸ்,

32, கமலாலயம் வடகரை,

## திருவாரூர்.

த. பெ. எண். 19 (தஞ்சை மாவட்டம்) தொலைபேசி. 142

# குறட்பாவின் திறப்பாடு

**வ. பெருமாள், எம. ஏ. பி. டி., எம். ஆர். ஏ. எஸ்.,**
**தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக்கல்லூரி, உரிகம், கோலார் தங்கவயல்**
**மைசூர் மாநிலம்.**

இவ்வுலகில் தோன்றிய புலவர்கள் பலர். அவர்கள் யாத்த பனுவல்கள் பல. அவர்களுடைய எச்சமாகிய நூல்களைக் கொண்டுதான் நாம் அவர்களுடைய உள்ளத்தை ஊன்றி உற்று நோக்க முடிகின்றது. தலைமை சான்ற புலவர் பெருமக்களுள் திருவள்ளுவர் முதன்மையானவர் என்பது இவ்வாழிசூழ் வையம் உணர்ந்த பேருண்மையாகும். எனவே அவரியற்றிய திருக்குறள் உலக இலக்கியத்திலே சிறந்து ஒளிர்கின்றது என்பது சொல்லாமலே விளங்கும்.

**இயற்கையில் அகரம்** :—தமிழ் மொழிக்கும் திருக்குறளுக்குமுள்ள அடிப்படையான ஒற்றுமையும் சிறப்பும் என்னவென்றால் முதலெழுத்தும் ஈற்றெழுத்தும் இரண்டிற்கும் ஒன்றாக அமைந்திருப்பதாகும். எழுத்துக்களுக்கெல்லாம் 'அகரம்' முதன்மையாக இருக்கின்றது என்பது எல்லோரும் அறிந்ததே. அகரம் எவ்வாறு இயற்கையுடன் ஒன்றியிருக்கின்றது என்பதைச் சிறிது ஆராய்வோம்.

சின்னஞ்சிறு குழந்தை முதன் முதலில் பேச வாயைத் திறந்தவுடன் 'அம்மா' என்ற சொல்லை ஒலிக்கின்றது. நாளடைவில் 'அப்பா', 'அண்ணா', 'அக்கா' என்று இவை போன்ற சொற்களை ஒலிக்கின்றது. அகரம் எழுத்திற்கு மட்டும் முதன்மையன்று மனிதன் பேசுகின்ற பேச்சிற்கும் முதன்மையாக அமைந்திருக்கின்றது. குழந்தை அகர ஒலியுடன் பேசத் தொடங்குவதால் மனிதனுடைய வாழ்விற்கே முதன்மையாக அமைந்திருக்கின்றது. வாயைத் திறந்தவுடன் ஏற்படுகின்ற இயற்கையான ஒலியில் அகரம் அப்படியே அமைந்திருக்கின்றது. மனிதனுடைய ஒலியில் மட்டுமன்று, விலங்குகளின் ஒலியிலும் அகரம் முதன்மையாக இருப்பதைக் காண்கின்றோம். பசு வாயைத் திறந்து ஒலிக்கும்போது 'அம்மா' என்ற ஒலியையே நாம் கேட்கின்றோம். எனவே 'அகரம்' இயற்கை ஒலிகளுக்கு அடிப்படையானதும் முதன்மையானதுமாகும் என்பது தேற்றம். திருக்குறளையும் இயற்கையுடன் ஒன்றுமாறு செய்ய விழைந்தவராய்,

"அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு"

என்று கூறுகின்றார் திருவள்ளுவர்.

**அதிகாரமும் தலைப்பும்** :—முப்பாலில் முதன் முதலாகக் 'கடவுள் வாழ்த்து' என்ற அதிகாரத்தைக் காண்கின்றோம். ஆனால் 'கடவுள்

வாழ்த்து' என்ற அதிகாரத் தலைப்பு திருவள்ளுவர் அளித்ததா என்று காய்தல் உவத்தலின்றி ஆராயுமிடத்து ஆசிரியர் இப் பெயரைத் தீட்டியிருக்க மாட்டார் என்று துணிந்து பகரலாம். ஏனெனில் முதல் அதிகாரத்தில் மட்டுமன்று திருக்குறள் முழுவதிலுமே " கடவுள் " என்ற சொல்லை வள்ளுவர் வழங்கினாரல்லர்.

முதல் அதிகாரத்தில்

" இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு "

" பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார் "

என்ற இரண்டு குறட்பாக்களிலும் 'இறைவன்' என்ற சொல்லை வழங்கியுள்ளார். முதல் அதிகாரத்திலுள்ள எந்த ஒரு குறளிலாவது இறைவனை வாழ்த்துவதாகக் காணோம். இறைவனின் அறிவின் திறப்பாட்டை 'வாலறிவன்' என்றும் அவனுடைய மனச் செம்மையையும் நடுநிலையையும் "வேண்டுதல் வேண்டாமை இலான்" என்றும் இறைவனுடைய உள்ளத் துறவையும் பற்றற்ற தன்மையையும் 'பொறிவாயில் ஐந்தவித்தான்' என்றும், அவனுடைய ஈடும் இணையுமற்ற தன்மையை 'தனக்குவமை இல்லாதான்' என்றும், அவன் எவ்வுயிர்க்கும் அறத்துடன் செந்தண்மைப் பூண்டு ஒழுகுவதால் 'அறவாழி அந்தணன்' என்றும், மக்கட்கில்லாத குணச் சிறப்பை இறைவன் பெற்றிருப்பதால் அவனை 'எண்குணத்தான்' என்றும் இவ்வாறாக இறைவனின் பெருமையையும் மாண்பையும் கூறுகின்றாரே தவிர எந்த ஒரு குறட்பாவிலாவது "வாழ்க" "வாழ்த்துவோம்" என்று இறைவனை வாழ்த்தினாரல்லர். முதல் அதிகாரத்தில் "கடவுள்" என்ற சொல்லும் காணப்படவில்லை. 'வாழ்த்து' என்ற சொல்லும் அங்கு இல்லை. எனவே 'கடவுள் வாழ்த்து' என்ற தலைப்பைவிட "இறைவன் மாண்பு" என்ற தலைப்பே மிக்க பொருத்த முடைத்து என்பது தேற்றம். ஆசிரியர் வழங்கியுள்ள அதிகாரத்தின் பெயரே அதன் கீழுள்ள பல குறட்பாக்களிலும் அமைவதைக் காண்கின்றோம். எடுத்துக்காட்டாகப் 'பேதைமை' என்ற அதிகாரத்திலுள்ள பத்து குறள்களிலும் பேதைமை அல்லது பேதை என்ற சொல்லும் 'இகல்' என்ற அதிகாரத்தின் கீழுள்ள எல்லாம் குறள்களிலும் இகல் என்ற சொல்லும் வழங்கப்பட்டிருக்கின்றன. இது போன்ற ஏறக்குறைய எல்லா அதிகாரங்களிலும் அதிகாரத்தின் பெயரை அப்படியே குறட்பாவில் எடுத்தாள்வது வள்ளுவனாரின் வழக்கமாகின்றது. 'மக்கட்பேறு' என்ற அதிகாரத்தில் ஏழு குறட்பாவில் 'மக்கள்' என்ற சொல்லும் ஏனைய மூன்று குறள்களில் 'மகன்' என்ற சொல்லும் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒரு சிலர் இந்த அதிகாரத்திற்குப் 'புதல்வரைப் பெறுதல்' என்று

# சித்தர் நெறி - வாயுவும் நோய்களும்

(தமிழ்ச் சித்தர், வைத்திய சரபம், கவிராஜ் ஈ. எஸ். இராமசாமி சோதிடர்
எரிசினம்பட்டி)

நம் சரீரம் சாதாரணமான தூல சரீரமாத்திரமன்று. எண்ணத்திற்காதாரமான காரண சரீரமும், எண்ணியவாறு செயற்படும் வடிவுகொள்ளும் சூக்கும சரீரமும் சேர்ந்த கூட்டு வடிவமான ஓர் குடிலம். இவ்வாறிசைந்த சூக்கும சரீர வியாபகத்தே முறை தவராது சேரும் பஞ்சபூதக் கூட்டுறவிலாயதே தூல சரீரம். இம் மூன்று தத்துவத்தையும் ஐயந்திரிபற அறிந்த பின்னரே நோய் நிதானம் அறிந்துகொள்வது சரி யென்ப.

க்ஷணந்தோறும் தன்னைத்தானே ஆக்கிக்கொள்ளும் பரம அணு இவற்றிற்கெல்லாம் ஆதாரமாகும். பரம அணு சிந்தித்த சூக்கும வடிவத்தே பஞ்சபூத ஏற்றத் தாழ்வின் கூட்டாலாகியதே ஜகத் தோற்றம். இந்தப் பரம அணுவே சுதநதரமானது.

பரம அணுவின் சுதந்தர காரிய நிலையில் காரியதரிசியாய் முதன்மையானதும் முறை தவராது செயலாற்றி வருவதும் வாயுவே. (இராமனும்—அனுமனும்)

சூக்கும சரீரம் என்பது, வாயு தெய்வீகக் கனலின் கூட்டு வடிவம். இது ஆகாய வியாபகத்தையே நடைபாதையாகக் கொண்டு மனோவேக வாயு வேகத்தால் நினைத்த க்ஷணத்தே குறித்த யிடத்திற் றங்கிச் செயலாற்றவல்லது. இதே பூர்வ சன்ம பழக்கத்தையுடைய சித்தன் சூக்கும சரீரத்துடன் எல்லா அண்டங்களும் சென்றறிந்து வருகிறான். ஆகாய வியாபகம் வாயு மனம் இம் மூன்றும் ஒன்றை ஒன்று கிராகிய சம்பந்தம் உள்ளது-

(கவி) "ஆயின் மிக்கோர் அரிய செயலெலாம்
நேயமிக்க மனத்தை நிறுத்தல் காண்
வாயு நிற்க மனமும் உடன் நிற்கும்
தோயம் நிற்குறில் நிற்குந் துரும்புமே."

(பிரபுலிங்கலீலை)

பந்தமுற்ற மனம் :—வாயுவின் கூட்டுறவால் புறத்தே செயலாற்ற முனைந்ததும் ஆகாய வியாபகத்தூடே யிருந்தும் விலகிச் செயலாற்றி அலைகிறான்.

பந்தமற்ற மனம் :—வாயுவின் கூட்டுறவால் உள்ளும் புறமும் ஏகநோக்கம் பெற்று ஆகாய வியாபகத்தே தொடர்புற்று அபூர்வ செயலாற்றுகிறான். இந் நிலையே இராமாவதாரம்.

கவி "புறங்காண அகங்காணப் பொதுமுகத்தின் அருள்நோக்கம்
இறங்காத தாமரைக்கண் எம்பிரான்" இராமன் (கம்பர்)

எனவே வாயுக்கள்:—ஆயுர்வேத நூல்கள் ஐந்து என்ப; தமிழ் நூல்கள் பத்து என்ப; சித்தர் நூல்கள் பனிரெண்டு என்ப.

பூதவாயு, 5, நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனச்செயன். தேவவாயு 5, பிராணன் அபானன் சமானன் உதானன் வியானன். கனல்வாயு 1. மனவாயு 1. ஆக 12.

கனல்வாயு மனவாயுவின் கூட்டே பிராணவாயு (உயிர்) சுதந்தர பரம அணுவின் ஒளியும் சிந்தனையும் சந்திப்பதே அறிவு. நேரடி தொடர்பு கொள்வதே பேரறிவு. செயலாற்றும் நம் சரீரம் சர்வாங்கங்களும் தாதுக்களும் ஏன்? இரத்தமுங்கூட செய்யவேண்டிய காரியங்களை ஒழுங்காக நடத்தும் சுதந்தர சக்தி வாய்ந்துள்ளது வாயு. வாயு ஐந்து என்று ஆயுர்வேதம் கூறுகிறது. தமிழ் நூற்கள் பத்து என்று கூறுகிறது. சித்தர் நூல் பனிரெண்டென்கிறது. அறிவு ஒன்றே, ஓரறிவுயிர், ஈரறிவுயிர், மூவறிவுயிர், நாலறிவுயிர், ஐயறிவுயிர், ஆறறவுயிர் என்று செயற்படுமிடத்தளவாகக் கணக்கிடப்பட்டது போல, வாயு ஒன்றே செயற்படுமிடத்திற்குத் தக்கவாறாக வெவ்வேறு பெயர் பெற்றன. செயற்படுமிடப் பிரிவும் தொழில் வேறுபாடுங் கொண்டு வாயு பனிரெண்டாகவுள்ளது. ஐந்து பத்து என்று கூறிய முன்னோர்கள் அவர்கள் அறிந்து கூறும் வியாதி நிதான வழி வகுப்புக்கும் போதுமானபடி எடுத்துக்கொண்டுள்ளார்கள் என்பதே.

நிசயோக உள்நோக்கத்தில் பந்தமற்ற நிலையில் நுட்பமான வாயு மனதைத் தன்னிலடக்கி சிவயோகத்தே கூடுகிறது. இதன் சிந்தனை யாட்சியால்தான் மற்ற வாயுக்கள் செயற்படுவன.

(இராமாயணம் தேவ ரகசியத்தே சிவ பரஞ்சுடர் வாயுபுத்திரனை அனுமனிடத்தில் செயற்படுகிறேனென்ற நிலை. அனுமானிடத்தில் பரமன் செயற்படும்போது. அச் செயற்படுந்திறன் எதிரிகளிடத்திருந்து மங்குவதால் அவர்கள் வீட்சி பெறுகின்றனர்.)

இதை ஒன்றொன்றாக ஆய்ந்து சென்றால் பிராண வாயுவும் இரத்தமும் நிரந்தரமாய்ப் பரவி நிற்கும் நெறியில் சரீரவாகுவிற்குத் தசவாயுக்களே போதும். ஏனைய இரண்டும் காரணகாரிய சூக்கும சரீர யியக்கத்தில் அசைவற்ற நிலையில் சுழல் போன்றிருக்கும் உருவில் பிராணவாயுவும் இரத்தமும் சந்திக்கும்போது உண்டாகும் (பிரிந்து கூடும்) நிலை வியக்கத்தக்கது. விவரித்தற்கியலாதது எனவே வாயு பனிரெண்டுதான்.

கர்ம வியாதிக்கு மூலகாரணமான விரணமுள்ள யிடத்திற்குப் பிராண வாயுவும் இரத்தமும் சென்று பரவி வராத குறைவே வியாதி நிவாரணமில்லை யென்பது. எல்லா வியாதியும் வீங்கல் வெடித்தல் சுருங்கல் என்ற மூன்று வகையாய் உண்டான தென்றாலும் குறிப்பிட்ட யிடத்திலுள்ள விரணம் என்பதில் அடங்கும்.

இந்த விரணம் உள்ள யிடத்திற்கு வாயு இரத்தம் மருந்துடன் சென்று பரவிஞல் வியாதி நிரந்தர குணமாகிவிடும்.

(அபானவாயு சில சமயம் நாற்றமின்மைகூட மலத்தின்மீது வாயு பரவாமல் வந்துள்ள சமயமேயாம்.)

இதே போல தோல் 7 இதில் நகத் தோலுக்கு வாயு இரத்தம் உப்பு கெந்தகம் ஓஜஸ் சத்துவத்துடன் சரியாய் பரவி வரவில்லையென்பதே வெண்குட்டம். இந்த நோக்கத்தால் சர்வரோக நிவாரணத்திற்குப் பாதாதி கேசம் வரையும் பிராணவாயு இரத்தத்துடன் பரவி வரவேண்டுவது அவசியம். நிரந்தரமாய்ப் பரவிவரச் சித்தர்கள் மருந்து கண்டறிந்து காயசித்தி பெற்ருர்கள்.

நாம் அவ்வாருன மருந்தை அறியாமல் (ஆப்ரேஷன்) ஓட்டை போட்டவுடன் வாயுவரும் வழியே இரத்தம் பிரவாகமும் ஏற்பட்டு சந்தித்து அவ் வியாதியை குணப்படுத்த முற்படுகிருேம். ஓட்டை அடைத்த மாத்திரத்தில் அவ்விடத்திற்கு வாயுவும் இரத்தமும் வராமலே நின்றுவிடலாம். மற்றும் ஜீவரசாயன நூல்-ஹோமியோபதி முறையில் பெரம்பாஸ் வீரியமுள்ளதைச் செலுத்திஞல் இரத்தத்தை வேகமாய்ச் செலுத்துகிறது என்று கண்டு கூறிஞர்கள். இரும்பும் திமுருகற் பாஷாணமும் கூடிய பெரம்பாஸ் அதிக வீரியமுள்ளதைக் கொடுப்பதால் இரத்தம் வேகமாய்ப் பரவும். அது நாம் குறிப்பிட்ட யிடத்திற்குப் பரவும் என்று எதிர்பார்க்க முடியாது. பரவிஞலும் வியாதிக்குப் பொருத்தமின்றிக் குழப்பம் உண்டாக்கும்.

சரீர தத்து இயற்கை நெறி. ஏற்பட்டுள்ள விஷ பாசத்தை இயற்கையிலேயே ஓரிடத்தில் ஒதுக்கிவிட்டு அவ் விடத்திற்கு வாயும் இரத்தமும் செல்லாமல் பிரிந்து விலகிவந்துகொண்டுள்ளதால், சரீரம் வாயுவுக்கு பூரண சுதந்தரமாகும். இந் நிலையில் வாயு பல வியாதிகளை ஒதுங்கி நடந்து செயலாற்றி வருவதாலேயே உலக மக்கள் பல கோடி வியாதியிருந்தும் வியாதி யில்லாதவர் போல செயலாற்றி வருகின்றனர். சில மருந்துகளை ஊசி மூலமாகச் செலுத்தியவுடன், வியாதி விரண யிடத்திற்கு இரத்தம் வாயு பரவாமல் செல்வதால் வியாதி குணம் போலத் தெரிகிறது, வாய்வும் இரத்தமும் வியாதியுள்ள யிடத்திற்குச் சென்று பரவி வரும்போது விஷபாசம் மேலும் வெளியாகித் துன்புறுத்துகின்றன. இந்த வாயு இவ்வாறு நடாத்தும் மகா சக்தி பலரும் கூருது விட்டுவந்த இரண்டு வாயுக்களால் ஏன்? ஒன்ருல் சிந்திக்கப்படும் செயலேயாம்.

இத்யாதி அரைகுறைவான வேலை சரீரத்தில் ஏன் நடைபெறுகின்றது என்று கருதுகிறீர்களா? சிற்றின்பத்தையே நாடி சரீரம் எடுத்துவரும் ஜீவன் அதை அனுபவிக்க வியாதியைவிட்டு ஒதுங்கி, உள்ள பலத்தைக்கொண்டே அனுபவம்பெறுகின்றன. இவ்வாருன அனுபவத்தில் எண்ணம் செயலால் விஷபாசம் நிறைந்துவிட்டால் இந்த சரீரத்தை விட்டு வேறு சரீரத்தை எடுக்கின்றன. சன்மக்

தோறும் விஷபாசம் மிகுதிப்பட்டுத் தங்கவே ஆறறிவுள்ள மனிதன் ஐயறிவு நாலறிவு, மூவறிவு, ஈரறிவு ஓரறிவு இனங்களாய் தாழ்ந்து கொண்டே போய்க்கொண்டு அழுந்தி அலைகிருன். உள்ள நிலையினும் ஆசையைப் பூர்த்திசெய்து கொள்கின்றன.

சன்மந்தோறும் ஆசாபாசம் குறைந்துகொண்டே வரும்போது இத்தகைய நியதியுள்ள இந்த மண் மண்டலத்தைவிட்டு அதிக ஆயுட்காலமுள்ள வேற்றண்டங்களில் சென்று பிறந்து இன்பம் நீடு பெறுகின்றனன்.

## இம் மண்ணுலக நியதி

(1) பத்தாம் வயதில் இளமைபோய், பண்பாம் இருபதாம் வயதில் ஒத்த வளர்ச்சி போகும். முப்பான் ஒளிபோம். நாற்பதாம் வயதில் சுத்தமேனி சத்துவம் போம். துலங்கும் ஐம்பதாம் வயதில் மெத்தத் தரணி புனல்நெருக்க மேலும் தளர்ந்து மயிர் வெளுக்கும்.

(2) நோக்கு மைம்பான் வெளுப்பெய்தி நுவலும், அறுபதாம் வயதில் நீக்கும் அப்புத் தேய்வுதனை நெருக்குங் காலைக் கண்ணொளி போம் போக்கும் நடக்கத் தகையாகும், பொருந்தும் எழுபதாம் வயதில் தீக்கணம் வாய்வு நெருங்குவதால் சிறந்ததாதுவெலாம் உலர்வாம்.

(3) உலர்ந்திடும் அழலில் உணர்வது குறையும், ஊதை ஆகாயத்தை நெருக்கில் மலர்ந்திடும் உரத்த மூச்சு மேலெடுக்கும். வயது தொண்ணூறெனு மதனில் அலர்ந்த ஆகாயம் சிவனை நெருக்கும். அளவில் இந்திரியம் விட்டேகும் கலந்நிடு ஜீவன் அகன்றிடும் நூறில். காயத்தின் கணக்கிதுதானே.

இந்த மண்ணுலக சரீர ஆயுட் கிரமத்தின் ஆதரவால் சன் மந்தோறும் அடைந்த விரணமிருந்தும் மிகுந்தும், குறிப்பிட்ட வயதான ஆயுட்பெற்று இன்பம் அனுபவிக்கிருன். அனுபவ சரீரத்தைவிட்டு வெளிப்படும் சீவன் தன் காரண சூக்கும வடிவுடன் ஆவி ரூப விஷ பாசத்தோடே கலந்து சென்று வேறு சரீரம் எடுக்கிருன். அத் தந்தை தாய் விஷ பாசமும் கலந்து மிசிரப்பட்ட திரையால் பூர்வக்ஞானம் மறைவுற்று பூர்வ சன்ம விஷபாச ஆவி ரூபங்களும் உருப்பெற்று வியாதியாய் ஒன்றன்பின் ஒன்ருய் வந்துகொண்டு வாய்வு பனிரெண்டில் குறிப்பிட்ட யிடத்திற்குள்ள வாய்வை, அவ் வாய்வுக்குக் குறிப்பிடப்படும் இரசவருக்கம், மூலிகை கொண்டு பலப்படுத்தி ஸ்திரப்படுத்தி சுத்த ரத்தத்துடன் மருந்தை வியாதி யிருக்குமிடத்திற்குப் பரவச் செய்தால் வியாதி பூரண குணமாய்விடும். எல்லா மருந்தும் வாய்வுக்கு இசைந்ததாக இசைந்தே அமைவது நல்ல மருந்தாகும். ஓர் தனிப்பட்ட சரக்கு அல்லது மூலிகை வாய்வை நிரந்தரஞ் செய்யுஞ் சக்தி யின்றேல்

அவை பயன் தரா. நிரந்தரமாக வாய்வை பரப்பவல்லது ஒரே ஒரு மூலிகை கோரக்கர் சமூலம். மற்றொன்று இரசமணி.

தூல சூக்கும காரண சரீர தத்துவம். மூலிகை மற்ற இரசவ ருக்கங்களின் பொருட் குணம். அறிந்த நுணுகிய அறிவாற்றலா லாக்கிக்கொண்ட மருந்தே சஞ்சீவி போன்றதாகும்.

## நுட்ப அறிவு என்பது

சர்ம உணர்ச்சி-நாவு-நாசி-கண்-செவி-மனசு-இந்த ஆறிடங்களி லும் அறிவு செயற்படுத்துவதால் ஆறறிவுடையவன் மனிதன் என்ப. இது இயற்கை நியதியான அறிவின் செயல். எவர்க்கும் பொதுவான புறத் தொழில். இந்த ஆறிடத்தில் இயற்கையாகப் புகுந்து எவரையும் செயலாற்றி வருவதற்கு (நுழைபுலம்) நுழை கின்ற அறிவு என்று கூறவேண்டுவதில்லை. புறச் செயலன்றி உள் நோக்கத்தே மகிமையான நிலைக்கு நுட்ப நோக்கில் புகுந்தறியும் அறிவே நுண்ணறிவாம் நுழைபுலம் என்றார். மேற்கண்ட ஆறிடங் களன்றி உள் நோக்கத்தே நுழைந்து தன்னை அறியும் அறிவு ஏழாவது அறிவாகும். இதைத்தான் திருவள்ளுவர்.

“ நுன் மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மன் மாண் புனைபாவை அற்று.” என்றார்.

தன்னை அறிதல் நிசயோகம் (சிவயோகம்) ஆம், நுட்ப நோக்கால் சரீர முக்காரண தத்துவமறிந்து தற்கால நிலை தெரிந்து விஷ பாசங்களின் அளவும் இருப்பிடமும் நிதானித்து வாயுவின் மூலமாக சுத்த ரத்தத்தை நிரந்தரமாகப் பரப்பவும் வேண்டும், விஷ பாசம் உடன் வெளியேறவும் வேண்டும். விஷம் நின்ற யிடங்கள் தேவைப் பொருட்களால் நிறைவு பெறவும் வேண்டும். இவ்வாறு செயற்படுத்தும் மருந்தே கல்பமாகும், இந்த நிறைவான ஆராய்ச்சி பொதிந்துள்ள ஓர் சரியான வைத்திய முறை வேற் றண்டத்தே இருக்கிறதென்றாலும் அதுதான் சித்த வைத்தியம்.

வாத பித்த கபம். விஷ பாசங்களை ஒதுக்கிவிட்டு நடைபெற்று வரும் சமான வாயுவுடன். சீதோஷ்ணம் பூ நீறுடன் வெளியாகும் நில ஆவி கலப்புற்று சுழற்காற்றில் ஆகாய வியாபகத்தே கலந்து உலாவும்போது ஒதுங்கி நின்ற விஷ பாசங்கள் தொகுதியாக வெளி யேறிப் பொருத்தமற்ற உணவோடு எதிர்த்து எண்ணம் செயலில் குழப்பமடைந்து புளித்துத் தோன்றும் விஷக் கிருமிகளே தொத்து நோய்க் கிருமிகள். இவை தானாகத் தோன்றி பின் ஒருவர்க்கொருவ ராகப்பற்றி விருத்தியாகிறது. வெளியேறிவரும் விஷபாசத்தை சமானவாயு மீண்டும் ஒதுக்கிவிடுமானால் வியாதி நீங்கிவிடும். இவ் வாறு ஒதுங்கியுள்ள விஷ பாசம் இல்லாத சரீரமே இல்லை.

ஒதுங்கியுள்ள விஷ பாசத்தைப் போக்கி புனித மனந்தந்து வளர்ச்சிதரும் மருந்தே சர்வரோக நிவாரணியாகும் எந்தெந்த நோய்வரினும் எமன் வந்தாலும் குருடருக்கும் பலிக்குமது காயசித்தி. (கோரக்கர்)

# கைமுறை அனுபவ வைத்தியம்

(வைத்தியர் பெஞ்சாமின், லாலுகாபுரம், திருநெல்வேலி.)

எதிர்பாராத சூழ்நிலையிலோ, மற்றும் இயற்கை, செயற்கை, செய்கைகளினாலோ, சிலம்பு வீச்சினாலோ, வெட்டு, குத்துக் காயங் களினாலோ ஏற்படும் "வற்ம வதைக்கு" கீழ் குறிப்பிட்ட மருந்துகள் நல்ல பயனளிக்கும். என் முன்னோர்களால் உபயோகிக் கப்பட்டு வந்ததும், என்னால் கடந்த 17 வருடங்களால் உபயோகிக் கப்பட்டு, என் அனுபவத்தில் உண்மை என்று அறியப்பட்ட மருந்துகளாகும், என்னிடம் இருக்கும் பழைய ஓலை எட்டுச் சுவடி யில் குறிக்கப்பட்ட முறைகளாகும்.

## வற்ம வதைக்கு மருந்து

1. எண்ணெய்:—நல்லெண்ணெய் படி-க-சாதிக்காய், காசிப் பத்திரி, கருள்ளி, காயம், சந்தணக்கட்டை, சூடம், பெருந் தும்பை, சிறு தும்பை, குப்பைமேனிச் சாறு இவைகள் வகைக்குப் படி-ஞ- நன்னாரி வேர், வில்வ இலை. அரளிப்பூ இவையெல்லாம் சேர்த்து மெழுகு பருவம்செய்து முழுகவும்.

2. **வற்மங் கொண்டு சாப்பாடு செரியாமல் இருந்தால்.** சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு பொடி செய்து இளக்கன் சர்க்கரையில் மூன்று பொழுது கொடுக்கவும்.

3. **வற்மங்-கொண்டால் பேதிக்கு.** சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, அக்கரா, ஓமம், நேர்வாளம் இவைகளைப் பொடி செய்து சர்க்கரையிலாவது, கருப்புக் கட்டியிலாவது கலந்து கொடுக்கவும்.

4. **புகை மருந்து.** கற்பூரம், குங்கிலியம், தாரம், காசுக்கட்டி, நவச்சாரம், இவை ஐந்தும் இஞ்சிச்சாறு, (நஞ்சுப்போக்கிய) விட்டு அறைத்து திரியிலூட்டிக் காயவைத்து, நாசியில் புகை ஏற்றவும்.

5. **வீக்கத்திற்கு மருந்தும், பூச்சும்.** காசுக்கட்டி, சுக்கு, வாமண சாரயாத்திலறைத்து கொதிக்கவைத்துப் பூசத் தீரும்.

6. சுக்கு, காசுக்கட்டி, உக்கிலசாளியல், சதகுப்பை, சன்னி நாயன், வெந்தயம், நெல்பொறி, களிப்பாக்கு, புளியமுத்துத்தோடு, ஆகிய இவைகளைச் சாராயம் விட்டறைத்து, முட்டை வெள்ளைக் கருவில் குழப்பிப்போடத் தீரும்.

7. **தலையில் முறிவு ஏற்பட்டால்.** (எண்ணெய்) பிரண்டை, கருள்ளி, நீர்முள்ளி, அமுக்குரு, வள்ளி, இவைகளை ஒன்றாக இடித்து எண்ணெய்தனில் விட்டுக் காய்ச்சி, பின்பு தலையில் கணக் காக கிளிக்கட்டி, சிறுக ஒற்றி, எண்ணெய் இடு.

8. துத்தியிலையைப்பறித்து அறைத்துக் காயத்தில் வைத்துக் கட்ட ஆறும்.

**9. வெட்டுப்பட்ட புண்ணிற்கு.** தேசிக்காயை (எலுமிச்சம் பழம்) வகுந்துப் பாதி இரண்டாக்கி,—ச-படி தனிலே எண்ணெய் விட்டுக் காய்ச்சி, பின்பு தேசிக்காய் ஒத்தணம் இடவும்.

**10. குத்துப்பட்ட புண்ணிற்கு,** இலுப்பைப்பட்டை, உதி, அகத்தி, மஞ்சள் இவைகளை சமன்கூட்டி குமரிச் சாராலறைத்து வீக்கந்தனில் பூச, புண்கள் வாசியாகும் (குணமாகும்).

**11. பொதுவான எண்ணெய்.** எண்ணெய் நாழி, புங்கன்பால், சீந்தி, கீழ்க்காய் நெல்லி, ஆடுதீண்டாப்பாளை, குப்பைமேனி, வேம்பாடை, அபின், சூடன், முதலியவைகளைச் சேர்த்துக் காய்ச்சி மெழுகுப் பதத்தில் வடித்துக் கொள்ளவும்.

இதனால் தீரும் வியாதிகள். உள்ளொலும்பு, நசிவுப்பனங்கள், வீக்கமொடு சதை நோவு, ரத்தக்கட்டு, இடுப்பு வலி, குறுக்கு நோவு, உளைச்சலோடு முடக்குவாதம், விசை நரம்பாலெழுந்த சூலை குடிபோகும்.

**12. உணர்விலா திமிர் தீர.** நெரிப்பு வெங்காயச்சாறு உழக்கு, வெள்ளறுகன் சாறு நாழி, சிறு தும்பைச் சாறு நாழி, உலா மூலிச் சாறு நாழி, அபின், பூரம், கஞ்சா-தேங்காய் எண்ணெயில் காய்ச்சி ஊட்டவும்.

**13. விசை நரம்பு சுளிக்கிக் கொண்டால்.** வெள்ளறுகு, துத்தி, சிறுதும்பை, கவுதும்பை, பன்றிக் கிழங்கு, வெற்றிலை, சித்திரமூலம், கார்த்திகைக் கிழங்கு, கடுகு, துத்தம், லிங்கம், பூடு, வெங்காயம், மனோசிலை, புற்று, துருசு. கருங்குத்திரிக்கம், காசுக்கட்டி, கஸ்தூரி மஞ்சள், பொன்னரிதாரம், சாம்பிராணி, சூடன், கெந்தகம், சவ்வீரம், சங்குமுடிதாரம், அஞ்சனக்கல், நவச்சாரம் முதலியன. இவைகளை ஒன்றாய்ச் சேர்த்து இடித்து கிளியாய்க் கட்டி. அதன் மேல் எண்ணெய் விட்டு சிறு தீயாய் எரிக்க தைலம் இறங்கும். அதை ஒரு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டு உபயோகிக்கவும்.

**14. காய சன்னிக்கு எண்ணெய்.** சங்குமுடிதாரம், மஞ்சனை மெழுகு, அஞ்சனக்கல், பவளப்புற்று, கருஞ்சீரகம், காரக்கோலரி சிவகைக்கு கழஞ்சி 2. வேம்பாடை கழஞ்சி 8. புங்கன்பால் $\frac{1}{2}$ படி. ஈசன்மூலி சார் படி $\frac{1}{4}$. மொசுமொசுக்கை சார் $\frac{1}{4}$ படி, நல்லெண்ணெய் படி 1, இவை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து பாண்டத்திலிட்டு, காய்ச்சி வடித்துக்கொள்ளவும். நீர்வைத்த புண், புரைகள் தீரும்.

15. சாதிலிங்கம், பவளப்புற்று, துத்தம், வேம்பாடைபட்டை. துரிசு, கார்க்கோலரிசி, கருஞ்சீரகம், புகையிலை, இவைகளைச் சாராயம் விட்டறைத்து, பின் பழச்சார் விட்டறைத்து, பின் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி உளட்டவும்.

**16.** துத்தம், துரிசு, வேம்பாடை, கார்க்கோலரிசி, கருஞ் சீரகம், வகைக்கு கவஞ்சி 1. வெள்ளைக்குந்திரிக்கம் கழஞ்சி 2. இவைகளை பூவரசம் பட்டைச் சாற்றுலரைத்து விளக்கெண்ணெய் (ஏரண்டத் தெண்ணெய்) கால் படியில் காய்ச்சி உபயோகிக்கவும்.

**தீரும் வியாதிகள்.** கனமான மூலக்குத்து, புண்புரைகள், வீச்சமுற்ற வியாதிகள், முதலியவைகளுக்கு உபயோகிக்க மேனி வச்சிரம்போல் ஆகும்.

**1. - மண்டையில் அடிபட்ட நோவுத் தீர.** (துவரெண்ணெய்) சுக்கு, மிளகு, வேம்பாடை, கடுகு, பூடு, வெங்காயம், கடுகு ரோகிணி, முருங்கைப்பட்டை, வெற்றிலை, இவைகளை எருக்கிலைச் சார் விட்டறைத்து, சிரசுதனில் பூசி, வெந்நீர் விடவும்.

**18. வற்மங்கொண்ட உடம்பிற்கு எண்ணெய்.** நன்னாரி, கோஷ்டம், மதுரம், ஏலம், நர்ச்சீரகம், சிவதை, தேத்தான், கல்நார், சாத்திரபேதி, சந்தணம், விலாமிச்சம், சிறுவேலி, பொன்னாங்கணி, கீழ்க்காய் நெல்லி, மேனிச் சார், நொங்குக்கண்டம், சேர்த்து காய்த் திறக்கி, வற்ம அழலுக்குத் தேய்க்கவும்.

**19. முறிவுக்குத் தைலம்.** லிங்கம், முடிமஞ்சள், மெழுகு, துரிசு, துத்தம், பவளப்புற்று, அஞ்சனக்கல், கார்க்கோலரிசி, கருஞ் சீரகம், மதுரம், வாளம், வேம்பாடை, குந்திரிக்கம், வெள்ளைப்பூடு, வசம்பு, வேப்பாலரிசி, கற்பூரம், சிவதை, விள்ளாம்பிசின், நன்னாரி, குறுந்தொட்டிவேர், புகையிலை, பூவரசம்பட்டை, குப்பைமேனி, துளசி, ஈசன்மூலி, புங்கன் பால், இசங்கின்வேர், ஆலம்பால் படி 1, எல்லாவற்றையும் ஒன்றாய் இடித்துக் கலந்து எண்ணெய் எரி பருவம் காய்த்து, பீங்கான் பாட்டலில் அடைத்து வைத்துக் கொண்டு, முறிவு சாரி சமனாய்க் கூட்டி எண்ணெய் இடவும் தீரும்.

---

## இருதய நோய்க்குச் சிறந்த மருந்து

**நன்றி: (வைத்திய விசாரதை டி. எஸ். ஜனக குமாரி)**

உலர்ந்த தாமரைப் பூவின் இதழ்கள் 50 கிராம், காசினி விதை 50 கிராம், விரை திராட்சை 50 கிராம், சீந்தில் கொடி 50 கிராம், சுக்கு 25 கிராம், திப்பிலி 20 கிராம், நெல்லிவற்றல் 50 கிராம் இவைகளைத் தனியே இடித்துத் தூளாக்கிவைத்துக் கொள்ளவும். இரண்டு லிட்டர் பாலில் இதனை வேக வைக்கவும். 500 கிராம் நாட்டுசர்க்கரை, 200 கிராம் நெய், 100 கிராம்தேன் சேர்த்து லேகிய மாகக் கிளறி வைத்துக்கொள்ளவும். காலை மாலை கழற்சிக்காய் அளவு கொடுத்து வரவும். இருதய நோய்களெல்லாம் ஓடிப் போகும். மூளைக்குப் பலமுண்டாகும்.

நவீன மருத்துவத்தில் கண்டுபிடிக்கப்பட்டு டாக்டர்களால், நோயாளிகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும் எந்த மாத்திரையும் இந்த தாமரை லேகியத்திற்கு ஈடாகாது. இது அனுபவத்தில் கைகண்ட மருந்து.

# நாடி இலக்கணம்

உதவியவர் :—வைத்தியர் டி. டி. நம்பிராஜன், தி. நகர், சென்னை.

### வாதத்தின் கூறு

1. வாதமது தன்னிலையில் மீறி நின்றால்
வலுவான தேகமெல்லாம் குத்தும் வீங்கும்
பேதமில்லா கை கால்கள் முடங்கிக் காணும்
பின்னுமதில் உடல்பொருமி திமிருண்டாகும்
பாதமுதல் சிரம்வரையில் உளைச்சல் தோன்றும்
பாங்கான குடல்புரட்டும் அன்னம் கொள்ளா(ர்)
போதமில்லாக் கழிச்சலுடன் வயிர்பொருமும்
புளிப்பாகும் நாவதுதான் தாது நட்டம்
அதுமான வாதத்தின் குணங்கள் சொன்னேன்
அன்பனே நீயதனையறிந்து பாரே.

### பித்தத்தின் கூறு

2. அனலான பித்தமதின் குறியைக் கேளாய்
அங்கமெல்லாம் காந்தலுடன் வரச்சி தோன்றும்
தணலான எரிவுடனே நடுக்கமுண்டாம்
தாங்கொணா மண்டையிடி கசக்கும் நாவும்
கனல்போலே வயிரதுதான் காந்தும் விக்கல்
கண்சுழலும் காதடைக்கும் அயர்வு மூர்ச்சை
உணவதுதான் செல்லாது சுரமும் காயும்
உள்நாக்கு வரட்சியுடன் நெஞ்செரியும்
கணமான பிரமேகம் பித்தவெட்டை
காமாலைநீர் மஞ்சள்சோகை பாண்டு
குணபேத குறிகண்டு நுட்பமாக
குவலயத்தில் பித்தநிலை யுணர்ந்து பாரே.

### சிலேத்துமத்தின் கூறு

3. சுழிமுனையைக் கொண்டதொரு சிலேத்துமத்தால்
சொல்லொணா உடல் நடுக்கம் திகைப்பு வேர்வை
சளியான ஈளையுடன் சயமும் விக்கல்
சத்தியுடன் இருமல்வரும் மேல்மூச்சாகும்
அழிவான இரத்தம் கக்கி வாய்நீ(ர்) ஊறும்
அன்னத்தை வெறுக்கும் நா வழுவழுக்கும்
தெளிவான உடல் வெளுக்கும் வற்றும் காயும்
சிலேத்துமத்தின் குறியதனை தெளிந்து கூறே.

# அகத்தியமுனிவர் பிள்ளைத் தமிழ்

(பசுமாத்தூர் வைத்தியர் முத்துக்குமாரசுவாமி உதவியது)

### இரத்த மூலப் பிரயோகம்

நாறுகரந்தை தனையரைத்து
        நற்கூ விளங்காய்ப் பருமனோடு
நல்லவெண்ணைய் படியுரியில்
நழுகப் பிசைந்தெட்ப் புண்ணுக்கு
மேறப் பொடித்துப் பலம்நாலு
        விசைத்துக்கொடுக்க மெழுகுபத
மேற்றித்தின்க நாளஞ்சில்
        இல்லையிரத்த மூலமெல்லாம்
வேறுமருந்து மிதற்கிடோ
        வெந்நீர் கொள்ளு பத்தியமாய்
விதனம் பொருக்குமூலத்தில்
        விரணபோகும் வதிக்க ளெனும்
ஆறும் பொதிகாசலத்துறையும்
        மையாவருக வருகவே
யடியாரத்தி லீசுரனு
        மரசேவருக வருகவே.

சிவகரந்தையை யரைத்தவிழுது, நடுத்தரமான வில்வப்பழத்தளவு, பசுவின் வெண்ணெய் படி $\frac{1}{4}$ புதிதான எள்ளு புண்ணுக்குத் தூள் பலம் 4

செய்முறை: இம்மூன்றையும் ஒன்ருய்ப் பிசைந்து மெழுகு பதமாகப் பீங்கானில் வைத்துக் கொள்க.

பிரமாணம்: வேளைக்குப் பலம் $1\frac{1}{4}$—$1\frac{1}{2}$ இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் அஞ்சு நாள் சாப்பிடவும்.

தீரும்நோய்கள்: இரத்த மூலம். மூலவேதனை, மூலப்புண், மூலக்கடுப்பு. மூலத்தினவு, முதலிய இரத்தமூல சம்பந்த சங்கடங்களெல்லாந்தீரும்.

பத்தியம்: வெந்நீரையே குடித்து, வெந்நீரையே புழங்க வேண்டும், குளிர்ந்த ஜலம், குளிர்ச்சியான வஸ்துக்கள் அதிக உஷ்ணமான வஸ்துக்கள், ஆகியவைகளாகா.

குறிப்பு:—இந்த மருந்தை இதில் சொல்லியிருக்கிறபடி ஒரே தடவையாய்ச் செய்து வைத்துக் கொள்வதில், வசதியிருப்பினும் அதில் ஒருவித வாசனையுண்டாகி, சாப்பிடுகிறதற்குச் சிலருக்கு பிடிக்காது. ஆகையால் அன்ருடம் இரு வேளைக்கும் ஒரே தடவையாய் அல்லது வேளைக்கு வேளையாய் சித்தப்படுத்திக் கொள்வது கொஞ்சம் கஷ்டமாயினும் சாப்பிட விருப்பமாகவும் குணத்தில் சிரேஷ்டமாகவும் காணப்படுகிறது. அம்முறை பின்வருமாறு:—

சிவகாந்தையை யறைத்த விழுது, பசுவின் வெண்ணெய் இவை யிரண்டும் வகை 1க்குப் பலம் ½ புதிய எள்ளுப் புண்ணாக்குத்தூள் பலம், 1 இம்மூன்றையும் கலந்து உட்கொள்ளவும், இவ்விதமே வேளைக்கு வேளை புதிது புதிதாய்ச் சித்தப்படுத்திக் கொள்ளவும்.

இந்தப் பாகத்துடன் கீழ்காணும் சிலாசத்துப் பற்பத்தைச் சேர்த்து சாப்பிடுவதால் முன்னிலும் சிரேஷ்டமான குண முண்டாம்.

## சிலாசத்துப் பற்பம்

சிலாசத்து தேவையான அளவு. இதனைச் சிறு துண்டுகளா யுடைத்து ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அதற்குமேல் நாலங்குலம் நிற்கும்படியாக இளநீரை விட்டு ஒரு நாள் வைத்து மறுநாள் நன்ருய்க் கழுவி சுத்தி செய்து உலர்த்தி கல்வத்திலிட்டுப் பொடித்து சிவகரந்தைச் சாற்றை விட்டு 2 சாமமரைத்து வில்லை செய்துலர்த்தி, ஓட்டிலிட்டு ஓட்டோடு மூடி 5 சீலை மண் செய்துலர்த்தி; கவசத்தினெடைக்குப் பத்து பங்கு வறட்டியிற்புட மிட்டாற விட்டெடுத்துப் பொடித்து சீசாவில் பத்திரப் படுத்த வேண்டும்.

பிரமாணம் :— குன்றுமணி யெடை-8.10

தீரும் நோய்கள்:— இரத்த மூலம், மூலக்கிராணி; சீதபேதி; இரத்தபேதி ; உஷ்ணபேதி ; மூலச்சூடு ; வெட்டைச்சூடு ; முதலிய வைகள் தீரும்.

## கெந்தக ரசாயனம்

மாதாஞ் சக்தி சுத்திசெய்து
வாங்கும்பல மூன்றதனிலிடு
மருந்து சடம்புவிதையிடுெடு
வளர்முக்கடுகு வாய்விளங்க
மேதாங்கொட்டை யிலவங்கத்
திலையுஞ்சித்ர மூலமுட
னினிதாய் வகைக்குப் பலமரைகொண்
டிடித்துச் சீனிகனிகதலி
நீதான் வேகுகிண்டிக்கொள்ள
நிலையாங்குட்டம் பதகரிகள்
நெருப்பாமூலங் குறைநோவு
நீண்டகுன்ம மறுமென்னும்
ஆதிமுனிவோர் தொழுபொதிகை
அருமாதவனே வருகவே
அரியைச் சிவமாக்கியவரதா
வகத்தீசுரனே வருகவே

## கெந்தக ரசாயனம்

சுத்திசெய்த நெல்லிக்காய்க் கந்தகம் பலம் 3. சுத்தி செய்யப் பட்ட எட்டிக்கொட்டை, மேல் தோல் சிவப்பட்ட சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, வாய்விளங்கம், இலவங்கப்பத்திரி, சுத்திசெய்த கொடிவேலி வேர்ப்பட்டை, இந்த ஏழு சரக்குகளையும் தனித்தனி யிடித்து வஸ்திரகாயம் செய்த சூரணம் வகை 1-க்குப் பலம் ½ சுத்தி செய்த சேராங்கொட்டை பலம் ½ சீனி சர்க்கரை பலம் 7.

**செய்முறை:** கந்தகத்தைக் கல்வத்திலிட்டு நுண்மையானப் பொடியாகச் செய்து எடுத்துக் கொள்க, சேராங்கொட்டையைக் கல்வத்திலிட்டு ஜாக்கிரதையுடன் மைபோல அரைத்து கந்தக முள்பட எல்லா சூரணங்களையும் ஒன்ருய்க் கலந்து, கல்வத்தி லுள்ளதுடன் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சேர்த்து எடுத்து முடிவில் ஒன்ருய்ச் சேர்த்து 2 சாமமரைத்து எடுத்து சர்க்கரையைச் சேர்த்து, கல்லுரலில் நன்ருயிடித்துக் கொள்ளவும்.

**பிரமாணம்:**—வேளை 1-க்கு வராகனெடை ½ முதல் 1. இதனை வாழைப்பழம்; நெய்; தேன்; முதலியவைகளில் அநுபானித்து, காலை மாலை யிரண்டு வேளையும் உட்கொள்ளலாம்.

**தீரும் நோய்கள்:**—குஷ்டரோகங்கள் படைகள்; மூல ரோகங்கள், குறைநோய்கள்; குன்மரோகங்கள் ஆகியவைகள் தீரும்.

**பத்தியம்:**—மற்ற கந்தக ரசாயன முறைகளிற் சேர்க்கப் படுவது போல இம் முறையில் ரசகர்ப்பூரம்; பரங்கிப்பட்டை முதலிய கொடிய சரக்குகள் இதில் சேர்க்கப்படவில்லை யாகையால் இதனைக் கடிய பத்யமின்றி யிச்சாபத்தியத்துடனே கொடுக்கலாம். ஆனல், வியாதி பலம், தேகபலம், முதலியவைகளுக்கேற்றபடி கடின பத்தியம் அவசியமானல் அப்படியும் செய்யலாம் இவ்விதி யானது சிகிச்சர்களைச் சேர்ந்தது.

### குறிப்பு:

(1) கந்தகம்; கொடிவேலி பட்டை; இவ் விரண்டின் சுத்தி யும் (1) **கந்தக சுத்தி**:—பழுப்பு நிறமுள்ள நெல்லிக்காய் கந்தகம் பலம் (1) இதனை ஒரு இரும்புக்கரண்டியிலிட்டுக் கொஞ்சம் பசு வின் நெய்யும் விட்டு சிறு தீயிலுருக்கி அரைப்படி பசும் பாலில் சாய்க்கவேண்டும். நன்ருய்க் குளிர ஆறின பின்பெடுத்து முன் போலவே யிரும்புக் கரண்டியிலிட்டுக் கொஞ்சம் பசுவின் நெய்யும் விட்டுருக்கி, முன் பாலை நீக்கிவிட்டு, அந்தச் சட்டியிலேயே வேறு அரைப்படி பசும் பால் விட்டு அதில் சாய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி பசு நெய் வார்த்துருக்கி யுருக்கித் தடவைக்குத் தடவை புதிய பாலில் 7 தடவை சாய்க்கவேண்டும்.

(2) பின்பு இவ்விதம் பாலில் சாய்த்து சுத்தி செய்ததை முன்போலவே 7 தடவைகள் பசுவின் நெய்விட்டுருக்கி யுருக்கித்

தடவைக்குத் தடவை ¼ படி வெங்காயச்சாற்றில் சாய்த்துக்கொள்ள வேண்டும்.

(3) பின்பு இக் கந்தகத்தைத் தூளாக்கி வைத்துக் கொள்க. ஒரு வாயகண்ட மண் பாத்திரத்தில் காற்படி பசுவின் பாலைவிட்டு, அப் பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய சேலைத் துண்டை வேடுகட்டி முன் கந்தகத் தூளைப் பரப்பி அதன்மேல் ஒரு சாணகியால் மூடி சாணகியின் உதட்டின் சுற்றிலும் ஒரு அங்குலம் மறையும்படி யாகப் பூமியிற் புதைத்துச் சுமார் 50 பலம் விராட்டியை யடுக்கிப் புடமிட்டாறினபின் னெடுத்த கந்தகமெல்லா முருகிப் பாத்திரத்திற்குள்ளுள்ள பாலில் விழுந்திருக்கும். அதையெடுத்து அதிலுள்ள ஈரத்தை மெல்லிய வஸ்திரத்தால் துடைத்து மறுபடியும் தூளாக்கி முன்போலவே பால்விட்டு வேடுகட்டி முன்போலவே புடமிட வேண்டும் இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்துகொள்வதே கந்தக சுத்தியாம்.

(2) கொடிவேலி வேர்ப்பட்டையை யிடித்துத் தூளாக்கி வஸ்திரகாயஞ் செய்து ஒரு மண் பாத்திரத்தில் பசும்பால் விட்டு பாத்திரத்தின் வாய்க்கு மெல்லிய வஸ்திரத்தால் வேடுகட்டி அதன் மேல் முன் சூரணத்தை வைத்து மேற்சட்டி மூடி அடுப்பேற்றி சூரணம் வேகிறவரையில் எரித்துச் சூரணத்தை நிழலிலுலர்த்தி நன்கு யுலர்ந்த பின்பு மறுபடியும் பொடித்து வஸ்திரகாயஞ் செய்து கொள்வதே கொடிவேலி வேர்ப் பட்டைச் சுத்தியாம்.

**சேங்கொட்டையின் சுத்தி** :—தேவையான சேங்கொட்டைகளை மூக்கை வெட்டி சாணிப் பாலில் வேகவைத்துலர்த்தி ; மறுபடியும் பசும்பாலில் வேகவைத்துலர்த்திக் கொள்வதே சேங்கொட்டை சுத்தியாம்.

**எட்டிக்கொட்டையின் சுத்தி** :—தேவையான அளவு எட்டி கொட்டைகளை ஒரு இரவும் பகலும் தண்ணீரில் ஊரவைத்து மேல் தோலை நீக்கி அரத்தால் ராவி தூள்செய்து சீமைக் காடியில் ஓர் இரவும் பகலும் ஊறவைத்தெடுத்து உலர்த்தியும் கொள்ளலாம் (அல்லது) அந்த தூளைப் பொட்டலமாகக் கட்டிப் பசும் பாலில் போட்டு நன்குய்க் கொதிக்கவைத் தெடுத்துத் தண்ணீர் விட்டு சுத்தமாக அலம்பிக் கழுவி யுலர்த்தியும் கொள்ளலாம். இவ்விதம் உலர்த்தின தூளை மறுபடியும் இடித்து வஸ்திரகாயம்செய்து எடுத்துக்கொள்ளவும். இதுவே எட்டிக்கொட்டை சுத்தி, (அல்லது) இக் கொட்டைகளை ஒன்றும் செய்யாமலே நன்குய்ச் சுட்டுக் கரியாக்கிப் பொடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளலாம்.

**துரோகிகளுக்கும் மாற்றானுக்கும் இடங் கொடாதீர்**
**நாட்டைக் காக்க தியாகம் செய்ய முன் வாருங்கள்**

# எனது அருமை நண்பர்களே!

உங்கள் உடல் நலம் பேணுதல் உங்கள் வாழ்வுநிலை உயர்வதற்கு உகந்ததும் அவசியமு மாகும். ஏதேதோ காரணங்களால் எதிர்பாராத பல நோய் நொடிகளுக்கு இலக்காகி கவலையே வாழ்க்கையாக மாறிவிடாமல் இருக்க, வருமுன் காக்கும் நினைவில்லாவிட்டாலும் வந்த பின்னு வது சீரான முறையில் சிகிச்சை பெற்று நலம் பெறுவதற்கு இப்போதே முயற்சித்தால் பய னுண்டு, நல்ல வாழ்வுண்டு. நீங்கள் நேரில் சந் திக்க விரும்பினுலும சரி, விபரம் தெரிவித்துப் பரிகாரம் நாட விரும்பினுலும் சரி, கீழ்க் கண்ட முகவரிக்கு உடன் எழுதுங்கள். அதிக உஷ்ணத் தாலும், கண் எரிச்சல், தலைவலி, வயிற்றுவலி மலச்சிக்கல், முட்டி, முதுகு, இடுப்புவலி, நரம் புத் தளர்ச்சி, சக்தி நலிவு ஆகிய நோய்களுக்கு நிவாரணியாக உள்ள கீழ்க்கண்ட எமது மருந்து களை வாங்கிச் சாப்பிடுங்கள். உஷ்ணம் குறை யும், ரத்தவிருத்தி ஏற்படும், சக்தி வளரும்.

1. நெ. ஸ்பெஷல் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 33-00
2. நெ. கால்சியம் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 23-00

*விபரங்களுக்கு:*

***தலைமை ஆபீஸ்:***

## சிவராஜ்
## சித்த வைத்திய சாலை

சிவதாபுரம் போஸ்டு

சேலம் 2

## பழனி யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,

## டாக்டர் C. A. ஜெயராம்



அவர்களின்

### சித்த மருந்துகள்

**No. 1. நாகபஸ்பம், காட்டுக்கருணை லேகியம்**

& ஸ்பெஷல் மூல முளைக் களிம்பு. நவ மூலங்களையும் நிர்மூலமாக்கும் 24 வேளை மருந்து செட் 1-க்கு ரூ. 7-50

**தங்க ரேக்கு குளிகை**

நாடி நரம்புகளை வலுப்படுத்தும், வீரியம் தரும் 50 குளிகை ரூ. 7-00

**சிட்டுக்குருவி லேகியம்**

வயோதிகத்தை மாற்றி வாலிபம் தரும். இளமை. உணர்ச்சி, ஆண்மை தரும். 100 Gram ரூ. 10-00

**பெரிய பவழ பஸ்பம் கலந்த சிவனப்பிரகாஷ்**

எனும் நெல்லிக்காய் லேகியம். சகல உஷ்ணம், வெட்டை, குடற் சூட்டைத் தணித்து ஆரோக்கியம் தரும், 400 Gram ரூ. 6-00

**குன்மாதி செந்தூரம் & குன்ம குடோரி லேகியம்**

அஷ்ட குன்மத்தையும் நீக்கும். பலவருட வயிற்று வலியையும் குணப்படுத்தும். 1 செட் ரூ. 15-00

விபரங்களுக்கு :

**டாக்டர் C. A. ஜெயராம்,**

**R. I. M. P.**

**யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,**

**பழனி.**

Telegram : "GURUCURES." P.B. 22 Phone 248

# குரு மருந்துகள்

80 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம்,
ஆங்கிலம் தமிழ் ஆராய்ச்சி முறைகள் கலந்த
— அரிய தயாரிப்புகள் —

தலைவலி தைலங்களில் மேலானது

## குரு தைலம்

பல்பொடிகளில் தலைசிறந்தது

## குரு பல்பொடி

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை

குறிப்பு:—போலி பல்பொடிகள் நடமாடுகின்றன
கடைகளில் பல்பொடி வாங்கும் பொழுது
குரு பல்பொடிதானென்று
கவனித்து வாங்கவும்.

## டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்,

குரு மருந்துசாலை : : திருச்சிராப்பள்ளி-1

தபால் பெட்டி 22